# அரச நிதி

## பொதுவான போக்குகள்

1993 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வெளிப்படுத்துகை, மொத்தப் பற்றாக்குறையினை இலக்கிடப்பட்ட மட்டமான மொ. உ. உற்பத்தியின் ஏறத்தாழ 8 சதவீதத்திற்குள் மட்டுப்படுத்தி இறைச் சமநிலையின்மையைக் குறைக்கின்ற நோக்கிலமைந்த தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இறைச் சீராக்க நிகழ்ச்சித் திட்டத்தில் மேலும் முன்னேற்றத்தினைக் காட்டியது. அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதம் 1992 இன் 20.2 சதவீதத்திலிருந்து 1993 இல் 19.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்த அரசிறை முயற்சியில் சிறிதளவு சோர்வு காணப்பட்டபோதும் நடைமுறைக் கணக்குக் குறை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் மொ. உ. உற்பத்தியின் 7.3 சதவீதத்திலிருந்து மொ. உ. உற்பத்தியின் 0.5 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இது, மொ. உ. உற்பத்தியுடன் தொடர்பான நடைமுறைச் செலவு 1991 இன் 22.5 சதவீதத்திலிருந்து 1992 இல் 21.1 சதவீதத்திற்கும் 1993 இல் மேலும் 20.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். முன்னைய ஆண்டில் நிலவிய தன்மைக்கு மாறாக, அரசு, அதன் முதலீடுகளை உயர்ந்த மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தது. இம் முதலீடுகள் 1992 இல் மொ. உ. உற்பத்தியின் 8.0 சதவீதத்திலிருந்து 1993 இல் 7.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையினால் இறைநிலையை வலுப்படுத்துவதற்கு அரச முதலீடுகளில் அளவுக்கு மீறிய சீராக்கங்களைச் செய்வதைத் தவிர்த்துக்கொண்டது. முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைந்த நடைமுறைச் செலவு, உயர்ந்த மூலதனச் செலவு என்பனவற்றின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1993 இல் மொத்தச் செலவு/மொ.உ. உற்பத்தி விகிதம் 27.9 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. 1992 இல் மொத்தச் செலவு /மொ. உ. உற்பத்தி விகிதம் 27.5 சதவீதத்திலிருந்ததெனினும் இது அரச முதலீடுகளில் மிகக் குறைந்த மட்டத்தினைக் கொண்டிருந்தது. 1993 இல் மொத்த அரசிறையினதும் செலவினதும் போக்கு முன்னைய ஆண்டின் 7.3 சதவீதத்திலிருந்து அதிகரித்து மொ. உ. உற்பத்தியில் 8.1 சதவீதம் கொண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை விளைவித்தது.

1993 இன் இறைச் செயலாற்றத்தில் இடையூறு விளைவிக்கும் தன்மை யாதெனில் 1992 இல் மொ. உ. உற்பத்தியில் 3.7 சதவீதத்திலிருந்து 1993 இல் மொ. உ. உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்கு உயர்வடைந்த உள்நாட்டுக் கடன்பாடுகளை அதிகரித்தளவில் நாடியமையேயாகும். தனியார்துறைக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளங்களை அரசு முன்னதாகவே தனதாக்கிக் கொண்டமை மூலம் ஏற்பட்ட உயர்ந்த மட்டத்திலான உள்நாட்டுக் கடன்பாடு உள்நாட்டு வட்டிவீதங்களில் மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனவே 1993 இல், அரசிறையின் பொதுவான அபிவிருத்திகள், அதிகரித்த உள்நாட்டுக் கடன்பாடுகளை நாடாது அதிகரித்த மட்டத்திலான அரச முதலீட்டைப் பேணுவதற்குத் தேவையான உறுதியான நடைமுறைக் கணக்கு மிகையொன்றினை உருவாக்கும் வகையில் அமைந்த இறை உறுதிப்பாட்டிற்கான தேவையினை வலியுறுத்தின.

## இறைச் செயலாற்றம்

1993 இல் அரசின் அரசிறை ரூ. 984,950 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 15 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. எனினும் முன்னைய ஆண்டைப்போலவே பொதுவான அரசிறை வளர்ச்சி பெயரளவிலான மொ.உ. உற்பத்தியின் அதிகரிப்பிற்குக் குறைவாகவே காணப்பட்டு அரசிறை/மொ. உ. உற்பத்தி விகிதத்தினை 1992 இன் 20.2 சதவீதத்திலிருந்து 1993 இல் 19.8 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்தது. அதிகரிக்கப்பட்ட பாதுகாப்புத் தீர்வை, மூன்று படிநிலை அமைப்பினுள் மொத்த விற்பனை வரிகளை நியாயப்படுத்துதல், இறக்குமதி மொத்த விற்பனை வரியின் மேல்நோக்கிய வரையறையை அதிகரித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் மீது சிறப்பு வரிவிதிப்பு போன்றவற்றின் மூலம் மேலதிக வரி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 1993 இல் பொதுவான வரி முயற்சிகள் நலிவடைந்திருந்தமைக்கு ஏற்றுமதி வரிகள் அகற்றப்பட்டமையும் இறக்குமதித் தீர்வைகளுக்கான வரித்தளத்தின் தேய்வும் பெருமளவு காரணங்களாகும்.

இதேவேளையில், ரூ. 1,009,510 இலட்சமாக விளங்கிய நடைமுறைச் செலவு 1992 இன் 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 12.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பில் மொத்த நடைமுறைச் செலவுகளின் மிதப்படுத்தலை பிரதிபலிக்கும் வகையில் நடைமுறைச் செலவு / மொ.உ.உ. விகிதம் 1992 இன் 21.1 சதவீதத்திலிருந்து 1993 இல் 20.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1993 இன் அரசிறைத் தொழிற்பாடுகளின் வரவேற்கத்தக்க விடயமொன்றாக விளங்கியது. அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கணிசமான கூலி அதிகரிப்பின் காரணமாக 1993 இல் சம்பளங்களும் கூலிகளும் 25 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் ரூ. 451,710 இலட்சமாக விளங்கிய பொருட்கள் பணிகளின் கொள்வனவு மீதான மொத்தச் செலவினம் ஏனைய செலவினங்களின் தொடர்ச்சியான மட்டுப்படுத்தல்களின் காரணமாக 14 சதவீத மிதமான அதிகரிப்பு ஒன்றினை மட்டுமே பதிவுசெய்தது. இந்தச் சீராக்க முயற்சியினை வலியுறுத்தும்வகையில் மொ. உ. உற்பத்தி தொடர்பில் பொருட்கள் பணிகளின் மீதான செலவு முன்னைய ஆண்டின் 9.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் 9.1 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஓய்வூதியம், சனசக்தி மீதான சமூக நலன்புரிச் செலவுகள், மதிய உணவு நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றின் செலவுகளின் பாரிய அதிகரிப்பின் மத்தியிலும் மொத்த மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 268,530 இலட்சமாக விளங்கி 12 சதவீதமான மிதமான அதிகரிப்பினை மட்டுமே காட்டின. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பில் இச் செலவுகள் 1992 இன் 5.6 சதவீதத்திலிருந்து 1993 இல் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 11 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் மொ. உ. உற்பத்தி தொடர்பில் அத்தகைய செலவுகள் 1992 இன் 6.1 சதவீதத்திலிருந்து 1993 இல் 5.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

அரசிறை முயற்சியினைப் பேணுவதில் பின்னடைவுகள் காணப்பட்டபோதிலும் மொத்த நடைமுறைச் செலவினத்தின் மிதமான வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை 1992 இன் ரூ. 38,580 இலட்சத்திலிருந்து

1993 இல் ரூ. 24,560 இலட்சத்திற்குக் குறைப்பதற்கு உதவி செய்தது. இதன் விளைவாக 1991 இன் 2.0 சதவீதத்திலிருந்து 1992 இல் 0.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த மொ. உ. உற்பத்தி விகிதம் 1993 இல் 0.5 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சேமிப்பினைப் பெருக்குவதற்கான தொடர்ச்சியான சீராக்க முயற்சிகளில் இது வரவேற்கத்தக்கதொன்றாக விளங்கியது. இதே வேளையில் அரசின் வரவு செலவுத் திட்டத்தினால் நிதியிடப்படும் அரச முதலீடு (நடைமுறைச் செலவும் அரசின் வர்த்தகத் தொழில்முயற்சிகளிற்கான கடன் வழங்கலும்) முன்னைய ஆண்டின் ரூ. 311,950 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 395,690 இலட்சத்திற்கு அதிகரித்ததுடன் அரச முதலீடு / மொ. உ. உற்பத்தி விகிதத்தினை 1992 இன் 7.3 சதவீதத்திலிருந்து 1993 இல் 8.0 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது. அரச முதலீட்டின் இவ்வதிகரிப்பின் மத்தியிலும் குறைவான நடைமுறைச் செலவின் காரணமாக மொத்தச் செலவு முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 27.5 சதவீதத்திலிருந்து 1993 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 27.9 சதவீதத்திற்கு மட்டுமே உயர்வடைந்தது.

இந்த அபிவிருத்திகளை வலியுறுத்தும் வகையில் 1993 இல் மொத்த வரவு செலவுத் திட்டம் (கொடைகளுக்கு முன்) ரூ. 401,090 இலட்சம் கொண்ட (மொ. உ. உற்பத்தியின் 8.1 சதவீதம்) பற்றாக்குறையினைக் கொண்டிருந்தது. 1991 இலும் 1992 இலும் மொத்த வரவு செலவுப் பற்றாக்குறை / மொ. உ. உற்பத்தி விகிதங்கள் முறையே 11.6 சதவீதமாகவும் 7.3 சதவீதமாகவும் விளங்கின. ரூ. 80,250 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கொடைகளின் பயன்பாட்டுடன் (மொ. உ. உற்பத்தியின் 1.6 சதவீதம்) பற்றாக்குறை (கொடைகளின் பின்) முன்னைய ஆண்டின் ரூ. 229,120 இலட்சத்துடன் (மொ. உ. உற்பத்தியின் 5.4 சதவீதம்) ஒப்பிடுகையில், ரூ. 320,840 இலட்சமாக (மொ. உ. உற்பத்தியின் 6.5 சதவீதம்) விளங்கியது. இதேவேளையில், அதிகரித்த அரச முதலீட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன்களின் பயன்பாடானது 1992 இன் ரூ. 73,610 இலட்சத்திலிருந்து (மொ. உ. உற்பத்தியின் 1.7 சதவீதம்) 1993 இல் ரூ. 98,550 இலட்சத்திற்கு (மொ. உ. உற்பத்தியின் 2.0 சதவீதம்) அதிகரித்தது. எனினும், நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையைப் பொறுத்தவரை மூலதனச் செலவின் பாரிய அதிகரிப்பானது உள்நாட்டுக் கடன்பாடுகளில் 1992 இன் ரூ. 155,520 இலட்சத்திலிருந்து (மொ. உ. உற்பத்தியின் 3.7 சதவீதம்) 1993 இல் ரூ. 222,290 இலட்சத்திற்கான (மொ. உ. உற்பத்தியின் 4.5 சதவீதம்) அதிகரிப்பினை விளைவித்தது. எனினும் மத்திய வங்கியின் வலுவான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் காரணமாக வரவு செலவுத்திட்டத் தொழிற்பாட்டுக்கான உள்நாட்டுக் கடன் பெறுகைகள் முழுமையாகவே வங்கியல்லா மூலங்களிலிருந்து திரட்டப்பட்டன. இதன்படி தொடர்ச்சியான நான்காவது ஆண்டிலும் வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையினை நிதியிடலில் வங்கித் தொழில் முறையிலிருந்தான மூலவளங்களின் பயன்பாட்டினைத் தவிர்த்துக்கொள்ள அரசுக்கு இயலுமாகக் காணப்பட்டது. 1989 – 1993 காலப்பகுதியில் அரசின் அரசிறைத் தொழிற்பாட்டின் தொகுப்பு அட்டவணை 1.55 இல் தரப்பட்டுள்ளது.

# இறை அளவுகளின் போக்குகள்



அட்டவணை 1.55

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | | 1994 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
| மொத்த அரசிறையும் கொடைகளும் .. | 60,386 | 74,662 | 84,049 | 94,061 | 110,927 | 106,520 | 123,220 |
| மொத்த அரசிறை .. | 53,979 | 67,964 | 76,179 | 85,781 | 101,977 | 98,495 | 115,634 |
| வரி அரசிறை .. | 47,513 | 61,206 | 68,157 | 76,353 | 94,377 | 87,274 | 105,276 |
| வரியில்லா அரசிறை .. | 6,466 | 6,758 | 8,022 | 9,428 | 7,600 | 11,221 | 10,358 |
| கொடைகள் .. | 6,407 | 6,697 | 7,870 | 8,280 | 8,950 | 8,025 | 7,586 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் .. | 82,164 | 99,814 | 119,527 | 116,973 | 141,917 | 138,604 | 154,219 |
| நடைமுறை .. | 56,884 | 71,771 | 83,756 | 89,639 | 97,437 | 100,951 | 109,367 |
| மூலதன .. | 20,750 | 19,529 | 25,304 | 24,948 | 35,436 | 33,777 | 35,233 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் .. | 4,530 | 8,514 | 10,467 | 2,386 | 9,044 | 3,876 | 9,619 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை ( – ) .. | -2,905 | -3,807 | -7,577 | -3,858 | 4,540 | -2,456 | 6,267 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) .. | -28,185 | -31,850 | -43,348 | -31,192 | -39,940 | -40,109 | -38,585 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) .. | -21,778 | -25,153 | -35,478 | -22,912 | -30,990 | -32,084 | -30,999 |
| நிதியிடல் .. | 21,778 | 25,152 | 35,478 | 22,913 | 30,989 | 32,084 | 30,999 |
| வெளிநாட்டுக் கடன்பாடு ... | 5,926 | 11,644 | 19,329 | 7,361 | 19,489 | 9,855 | 18,241 |
| உள்நாட்டுக் கடன்பாடு ... | 15,852 | 13,508 | 16,149 | 15,552 | 11,500 | 22,229 | 12,758 |
| சந்தையல்லாக் கடன்பாடு ... | 2,650 | 305 | 691 | -3,205 | - | - | - |
| சந்தைக் கடன்பாடு ... | 13,202 | 13,203 | 15,458 | 18,757 | 11,500 | 22,229 | 12,758 |
| வங்கியல்லா ... | 13,735 | 12,946 | 15,423 | 21,079 | 13,000 | 28,308 | 12,758 |
| வங்கி ... | -533 | 257 | 35 | -2,322 | -1,500 | -6,079 | - |

(தொடரும்)

*அட்டவணை 1.55 (தொடர்ச்சி)*

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு
## மொ.உ.உ. இன் சதவீதமாக

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | | 1994 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| மொத்த அரசிறையும் கொடைகளும் | .. | 24.0 | 23.2 | 22.6 | 22.1 | 22.4 | 21.4 | 21.7 |
| மொத்த அரசிறை | .. | 21.4 | 21.1 | 20.4 | 20.2 | 20.6 | 19.8 | 20.3 |
| வரி அரசிறை | .. | 18.9 | 19.0 | 18.3 | 17.9 | 19.1 | 17.6 | 18.5 |
| வரியில்லா அரசிறை | .. | 2.6 | 2.1 | 2.2 | 2.2 | 1.5 | 2.3 | 1.8 |
| கொடைகள் | .. | 2.5 | 2.1 | 2.1 | 1.9 | 1.8 | 1.6 | 1.3 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | .. | 32.6 | 31.0 | 32.1 | 27.5 | 28.7 | 27.9 | 27.1 |
| நடைமுறை | .. | 22.6 | 22.3 | 22.5 | 21.1 | 19.7 | 20.3 | 19.2 |
| மூலதன | .. | 8.2 | 6.1 | 6.8 | 5.9 | 7.2 | 6.8 | 6.2 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | .. | 1.8 | 2.6 | 2.8 | 0.6 | 1.8 | 0.8 | 1.7 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை (–) | .. | -1.2 | -1.2 | -2.0 | -0.9 | 0.9 | -0.5 | 1.1 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | .. | -11.2 | -9.9 | -11.6 | -7.3 | -8.1 | -8.1 | -6.8 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) | .. | -8.6 | -7.8 | -9.5 | -5.4 | -6.3 | -6.5 | -5.4 |
| நிதியிடல் | ... | 8.6 | 7.8 | 9.5 | 5.4 | 6.3 | 6.5 | 5.4 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | ... | 2.4 | 3.6 | 5.2 | 1.7 | 3.9 | 2.0 | 3.2 |
| உள்நாட்டுக் கடன்பாடு | ... | 6.3 | 4.2 | 4.3 | 3.7 | 2.3 | 4.5 | 2.2 |
| சந்தையல்லாக் கடன்பாடு | ... | 1.1 | 0.1 | 0.2 | -0.8 | – | – | – |
| சந்தைக் கடன்பாடு | ... | 5.2 | 4.1 | 4.1 | 4.4 | 2.3 | 4.5 | 2.2 |
| வங்கியல்லா | ... | 5.5 | 4.0 | 4.1 | 5.0 | 2.6 | 5.7 | 2.2 |
| வங்கி | ... | -0.2 | 0.1 | ... | -0.5 | -0.3 | -1.2 | – |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## அரசிறை

1993 இல் ரூ. 984,950 இலட்சமாக விளங்கிய அரசின் அரசிறையை 1992 இன் 13 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 15 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டினைப் போலவே 1993 இன் மொத்த அரசிறைச் சேகரிப்பின் 89 சதவீதத்திற்கு வரி அரசிறை வகைகூறியது. பாதுகாப்புத் தீர்வையினதும் உள்நாட்டுப் பொருட்கள் பணிகளின் மீதான மொத்த விற்பனவு வரியினதும் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தின் காரணமாக உள்நாட்டுப் பொருட்கள் பணிகளிலிருந்தான வரி அரசிறையின் பங்கு 1992 இன் 50 சதவீதத்திலிருந்து 1993 இல் 55 சதவீதத்திற்குத் தொடர்ந்து அதிகரித்தது. இந்த வரிகளில் இருந்தான அதிகரித்த சேகரிப்பிற்கு மொத்த விற்பனவு வரி அமைப்பினை மேலும் நியாயப்படுத்தல், இறக்குமதி மொத்த விற்பனை வரிக்கான உச்ச வரையறை அதிகரிப்பு, மற்றும் உயர்ந்த பாதுகாப்புத் தீர்வையின் ஆண்டு முழுவதற்குமான தாக்கம் என்பனவற்றைக் காரணமாகக் குறிப்பிடலாம். மாறாக, 1992 இன் இறுதியில் வரிகள் அகற்றப்பட்டமையினையும், பலதரப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை புறக்கணிப்புக்களும் விலக்களிப்புக்களும் வழங்கப்பட்டமையின் காரணமாக இறக்குமதித் தீர்வைக்கான வரித்தளத்தில் ஏற்பட்ட தேய்வினையும் பிரதிபலிக்கும் வகையில் 1993 இல் பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகளின் பங்கு 4 சதவீதப் புள்ளிகளினால் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சி கண்டது. இதேவேளையில் கூட்டு ஊழியர்களின் மீது உழைக்கும்போதே செலுத்தப்படும் வரி விதிக்கப்பட்டமையின் ஓரளவு காரணத்தினால் வருமானவரிக்கான வரித்தளம் விரிவடைந்தமையினால் வருமான வரிகளின் பங்கு 1992 இன் 14 சதவீதத்திலிருந்து 1993 இல் 16 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. இரு அரச வங்கிகளினதும் மீளமைப்புக்காக வழங்கப்பட்ட முறிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்பட்ட தடுத்துவைக்கப்பட்ட வரியின் அதிகரித்த சேகரிப்பும் வருமான வரிகளின் பங்கு அதிகரித்தமைக்கு ஓரளவு காரணமாகும். இதேவேளையில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளின் மீதான திருப்பிச் செலுத்தப்பட வேண்டியன அல்லாத வரியின் பேரிலான அரசிறையின் பங்கு 1992 இன் 3 சதவீதத்திலிருந்து 1993 இல் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் காரணமாக மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல் உடைமையில் காணப்பட்ட வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது.

ரூ. 112,210 இலட்சமாக விளங்கிய வரியல்லா மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 1992 இன் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 19 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டினைப் போலவே அத்தகைய மூலங்களிலிருந்தான அரசிறை மொத்த அரசிறைச் சேகரிப்பில் 11 சதவீதத்திற்கு வகைகூறியது. நிதிச் சட்டத்தின் கீழ் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மீது விதிக்கப்பட்ட ரூ. 7,710 இலட்சம் கொண்டதும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீது விதிக்கப்பட்ட ரூ. 3,000 இலட்சம் கொண்டதுமான சிறப்புத் தீர்வைகளின் பெருமளவு காரணமாக இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான அரசிறை ரூ. 19,760 இலட்சத்தினால் அதிகரித்து, ரூ. 21,350 இலட்சமாக விளங்கியது. வரியல்லா அரசிறையில் வட்டி வருவாயின் பங்கு 1992 இன் 38 சதவீதத்திலிருந்து 1993 இல் 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1993 இல் ரூ. 10,000 இலட்சமாக விளங்கிய மத்திய வங்கி இலாப மாற்றல்கள் 1992 உடன் ஒப்பிடுகையில் ரூ. 1,500 இலட்சம் குறைவானதாக இருந்தன.

## வரி அரசிறை

பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகளிலிருந்து உள்நாட்டு வரிகளைநோக்கி செய்யப்பட்ட தொடர்ச்சியான அமைப்பு மாற்றத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டுப் பொருட்கள் பணிகளின் மீதான வரிகளிலிருந்து பெற்ற அரசிறை ரூ. 484,170 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 27 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த வரி மூலத்தின் அதிகரித்த முக்கியத்துவத்திற்கு மூன்று படிநிலைகளிலான அமைப்பு முறையொன்றினுள் மொத்த விற்பனை வரிக்காக பண்டங்கள் மீள் வகைப்படுத்தப்பட்டமையையும் உயர்ந்த உச்சவரையறையொன்று விதிக்கப்பட்டமையால் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரியினது வரித் தளம் அதிகரித்தமையையும், 3 சதவீத பாதுகாப்புத் தீர்வையின் முழு ஆண்டுக்குமான தாக்கம், மறைமுக வரிகளில் பெரும்பாகமொன்றினை உருவாக்கும் உணவு குடிபானம், புகையிலைத் துணைத் துறையின் மீட்சியினையும் காரணமாகக் குறிப்பிடலாம்.

மொத்த விற்பனவு வரிகள் ரூ. 293,820 இலட்சமாக விளங்கி 1992 இன் 12 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 22 சதவீத அதிகரிப்பைக் காட்டின. தயாரிப்பு நடவடிக்கைகள் மீதான மொத்த விற்பனவு வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை ரூ. 90,480 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவான 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1992 இல் நாட்டில் நிலவிய வரட்சி நிலைமைகளிலிருந்து உணவு, குடிபானம், புகையிலைத் தயாரிப்பு நடவடிக்கைகள் மீட்சியடைந்தமையை இதற்கான பெருமளவு காரணமாகக் குறிப்பிடலாம். மேலும் 1993 பெப்புருவரியில் உச்சஎல்லை 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட தாக்கத்தின் கீழ் இறக்குமதி மொத்த விற்பனவு வரியிலிருந்தான அரசிறை ரூ. 156,070 இலட்சமாக விளங்கி 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டைவிட 10 சதவீதப் புள்ளிகள் அதிகமானதாகும். இதனால் மொத்த விற்பனவு வரிச் சேகரிப்பின் இறக்குமதி மொத்த விற்பனவு வரியின் பங்கு 1992 இன் 51 சதவீதத்திலிருந்து 1993 இல் 53 சத வீதத்திற்கு அதிகரித்தது. 1993 பெப்புருவரியில் தொலைத் தொடர்புப் பணிகளின் மீதான மொத்த விற்பனவு வரி 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையையும் 1993 செத்தெம்பரிலிருந்து பயண முகவர்கள், உணவகங்கள், ஏல விற்பனையாளர் போன்றோர் மீது உயர்ந்தளவான 10 சதவீத மொத்த விற்பனவு வரிவிதிக்கப்பட்டமையையும் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கு விலக்களிக்கப்பட்டிருந்த மொத்த விற்பனை வரி 1993 நவெம்பரில் அகற்றப்பட்டமையையும் தொடர்ந்து, தயாரிப்பு அல்லாத மொத்த விற்பனவு வரிகள் 1992 இன் ரூ. 35,460 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 47,270 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேவேளையில் கூட்டிய பெறுமதி வரிமுறைக்கு மாறுவதற்கு வசதி செய்து கொடுக்கும் நோக்கில் மொத்த விற்பனவு வரியானது நடைமுறையிலுள்ள 5, 10, 15 மற்றும் 20 சதவீத நான்கு படி நிலைகளிலான வரி அமைப்பு முறையிலிருந்து 5, 10 மற்றும் 20 சதவீத மூன்று படிநிலை அமைப்பினுள் நியாயப்படுத்தப்பட்டது.

அட்டவணை 1.56

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1993 தற்காலிகம் | 1994 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... | 47,513 | 61,206 | 68,157 | 76,353 | 94,377 | 87,274 | 105,276 |
| வருமானவரிகள் ... | 5,148 | 7,337 | 9,722 | 10,967 | 12,430 | 13,658 | 15,781 |
| தனியார் ... | 2,207 | 2,957 | 3,539 | 4,067 | 4,250 | 5,272 | 5,504 |
| கூட்டு* ... | 2,941 | 4,380 | 6,183 | 6,900 | 8,180 | 8,386 | 12,277 |
| வங்கி வரி ... | – | – | – | – | – | 1,000 | – |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... | 2,697 | 3,140 | 3,541 | 3,597 | 3,420 | 3,454 | 4,191 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 2,345 | 2,618 | 3,033 | 1,991 | 1,440 | 1,073 | 540 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 20,828 | 28,770 | 32,107 | 38,158 | 52,257 | 48,417 | 58,364 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 14,658 | 20,291 | 21,430 | 24,095 | 31,865 | 29,382 | 35,401 |
| தயாரிப்பு ... | 4,496 | 6,798 | 7,945 | 8,262 | 11,275 | 9,048 | 11,518 |
| தயாரிப்பல்லாத ... | 3,004 | 3,726 | 2,974 | 3,546 | 3,470 | 4,727 | 4,134 |
| இறக்குமதிகள் ... | 7,158 | 9,767 | 10,511 | 12,287 | 17,120 | 15,607 | 19,749 |
| கலால் வரி ... | 5,812 | 8,170 | 10,597 | 10,232 | 14,730 | 12,410 | 13,929 |
| குடிவகை ... | 1,955 | 2,657 | 3,126 | 3,434 | 4,650 | 4,125 | 5,013 |
| புகையிலை ... | 3,855 | 5,461 | 6,884 | 5,573 | 8,410 | 7,428 | 7,148 |
| ஏனையவை ... | 2 | 52 | 587 | 1,225 | 1,670 | 857 | 1,768 |
| பாதுகாப்பு வரி ... | – | – | – | 3,764 | 5,622 | 6,566 | 8,759 |
| உரிமக் கட்டணங்கள் ... | 358 | 309 | 80 | 67 | 40 | 59 | 275 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 16,495 | 19,341 | 19,754 | 21,640 | 24,830 | 20,672 | 26,400 |
| இறக்குமதிகள் ... | 14,923 | 16,792 | 18,617 | 20,819 | 23,800 | 20,615 | 26,400 |
| ஏற்றுமதிகள் ... | 1,572 | 2,549 | 1,137 | 821 | 1,030 | 57 | – |
| தேயிலை ... | 628 | 1,601 | 492 | 360 | 596 | 23 | – |
| இதில் பெறுமான விகிதவரி ... | 355 | 1,311 | 298 | 226 | 516 | – | – |
| இறப்பர் ... | 766 | 747 | 476 | 318 | 365 | 16 | – |
| தெங்கு ... | 126 | 151 | 125 | 117 | 40 | 4 | – |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | 52 | 50 | 44 | 26 | 29 | 14 | – |
| வரியல்லா அரசிறை ... | 6,466 | 6,758 | 8,022 | 9,428 | 7,600 | 11,221 | 10,358 |
| சொத்து வருவாய் ... | 4,387 | 4,192 | 5,964 | 6,262 | 4,750 | 6,927 | 6,879 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 2,000 | 500 | 500 | 1,150 | 1,000 | 1,000 | 1,000 |
| வட்டி வருவாய் ... | 1,198 | 1,143 | 2,617 | 3,596 | 3,465 | 3,509 | 4,406 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 1,041 | 2,235 | 2,612 | 1,179 | – | – | – |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 627 | 835 | 917 | 1,225 | 1,140 | 1,303 | 1,490 |
| ஏனைய வரியில்லா அரசிறை ... | 1,452 | 1,731 | 1,141 | 1,941 | 1,710 | 2,991 | 1,989 |
| **மொத்த அரசிறை ...** | **53,979** | **67,964** | **76,179** | **85,781** | **101,977** | **98,495** | **115,634** |

* வங்கிகளின் மறுசீரமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முறிகளின் மீதான தடுத்துவைத்தல் வரிஉட்பட.

(தொடரும்)

*அட்டவணை 1.56 (தொடர்ச்சி)*

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு (மொ.உ.உ. இன் சதவீதமாக)

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | | 1994 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| வரி அரசிறை ... | 18.9 | 19.0 | 18.3 | 17.9 | 19.1 | 17.6 | 18.5 |
| வருமானவரிகள் ... | 2.0 | 2.3 | 2.6 | 2.6 | 2.5 | 2.7 | 2.8 |
| தனியார் ... | 0.9 | 0.9 | 0.9 | 1.0 | 0.9 | 1.1 | 1.0 |
| கூட்டு* ... | 1.2 | 1.4 | 1.7 | 1.6 | 1.7 | 1.6 | 1.8 |
| வங்கி வரி ... | – | – | – | – | ... | – | – |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... | 1.1 | 1.0 | 1.0 | 0.8 | 0.7 | 0.7 | 0.7 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 0.9 | 0.8 | 0.8 | 0.5 | 0.3 | 0.2 | 0.1 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 8.3 | 8.9 | 8.6 | 9.0 | 10.6 | 9.7 | 10.3 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 5.8 | 6.3 | 5.8 | 5.7 | 6.4 | 5.9 | 6.2 |
| தயாரிப்பு ... | 1.8 | 2.1 | 2.1 | 1.9 | 2.3 | 1.8 | 2.0 |
| தயாரிப்பல்லாத ... | 1.2 | 1.2 | 0.8 | 0.8 | 0.7 | 1.0 | 0.7 |
| இறக்குமதிகள் ... | 2.8 | 3.0 | 2.8 | 2.9 | 3.5 | 3.1 | 3.5 |
| கலால் வரி ... | 2.3 | 2.5 | 2.8 | 2.4 | 3.0 | 2.5 | 2.4 |
| குடிவகை ... | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.9 |
| புகையிலை ... | 1.5 | 1.7 | 1.8 | 1.3 | 1.7 | 1.5 | 1.3 |
| ஏனையவை ... | – | – | 0.2 | 0.3 | 0.3 | 0.2 | 0.3 |
| பாதுகாப்பு வரி ... | – | – | – | 0.9 | 1.1 | 1.3 | 1.5 |
| உரிமக் கட்டணங்கள் ... | 0.1 | 0.1 | – | – | – | – | – |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 6.5 | 6.0 | 5.3 | 5.1 | 5.0 | 4.2 | 4.6 |
| இறக்குமதிகள் ... | 5.9 | 5.2 | 5.0 | 4.9 | 4.8 | 4.1 | 4.6 |
| ஏற்றுமதிகள் ... | 0.6 | 0.8 | 0.3 | 0.2 | 0.2 | – | – |
| தேயிலை ... | 0.2 | 0.5 | 0.1 | 0.1 | 0.1 | – | – |
| இதில் பெறுமான விகிதவரி ... | 0.1 | 0.4 | 0.1 | 0.1 | 0.1 | – | – |
| இறப்பர் ... | 0.3 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | – | – |
| தெங்கு ... | 0.1 | – | – | – | – | – | – |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | – | – | – | – | – | – | – |
| வரியல்லா அரசிறை ... | 2.6 | 2.1 | 2.2 | 2.2 | 1.5 | 2.3 | 1.8 |
| சொத்து வருவாய் ... | 1.7 | 1.3 | 1.6 | 1.5 | 1.0 | 1.4 | 1.2 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 0.8 | 0.2 | 0.1 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 |
| வட்டி வருவாய் ... | 0.5 | 0.4 | 0.7 | 0.8 | 0.7 | 0.7 | 0.8 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 0.4 | 0.7 | 0.7 | 0.3 | – | – | – |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 0.2 | 0.3 | 0.2 | 0.3 | 0.2 | 0.3 | 0.3 |
| ஏனைய வரியில்லா அரசிறை ... | 0.6 | 0.5 | 0.3 | 0.5 | 0.3 | 0.6 | 0.3 |
| **மொத்த அரசிறை** ... | **21.4** | **21.1** | **20.4** | **20.2** | **20.6** | **19.8** | **20.3** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1993 இல் கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை ரூ. 124,100 இலட்சத்தினை உருவாக்கியதுடன் முன்னைய ஆண்டின் 3 சதவீத வீழ்ச்சிக்கு மாறாகக் கவர்ச்சிகரமான 21 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது பெருமளவில் பதனிடப்பட்ட புகையிலை மற்றும் சிகரட் என்பனவற்றின் அதிகரித்த அரசிறைச் சேகரிப்பிலிருந்து பெறப்பட்டது. பதனிடப்பட்ட புகையிலை உற்பத்தியின் மீட்சியின் விளைவாக விற்பனை அளவின் வளர்ச்சி மிதமாகவிருந்த போதிலும் இம் மூலத்திலிருந்தான அரசிறை ரூ. 74,280 இலட்சமாக விளங்கி 33 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து 1992 இன் ஒற்றோபரில் சிகரட் ஒன்றின் மீது விதிக்கப்பட்ட ரூ. 0.52 கொண்ட கலால் தீர்வையின் மீளாய்வின் ஆண்டு முழுவதற்குமான தாக்கத்தினைப் பெருமளவில் பிரதிபலித்தது. இதேவேளையில் 1993 இல் ரூ. 41,250 இலட்சமாக விளங்கிய மதுவகைகளின் அதிகரித்த நுகர்வினதும் 1993 இல் ஒரு போத்தல் சாராயத்திற்கு ரூ. 8/- இனால் மேல் நோக்கித் திருத்தப்பட்ட தீர்வையினதும் காரணமாக முன்னைய ஆண்டைவிட 20 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. 1993 ஒற்றோபரில் பெற்றோல் (இலீற்றர் ஒன்றுக்கு ரூ. 2/-) போன்ற பொருட்களின் மீது கலால் வரியினை அறிமுகப்படுத்தியும், 1993 நவெம்பரில் 10 - 15 ஆட்களின் ஆசன இயலளவைக்கொண்ட டீசல் வாகனங்கள் (15 சதவீதம்) மற்றும் வீடியோ விளையாட்டுக் கருவிகள் (25 சதவீதம்) என்பனவற்றில் கலால் தீர்வைகளை விதித்து கலால் வரிகளின் வரித்தளத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மத்தியிலும் கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான அரசிறை 1992 இன் ரூ. 12,250 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 8,570 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1993 பெப்புருவரியில் மென்பானங்களின் தீர்வை போத்தல் ஒன்றுக்கு ரூ. 1/- இலிருந்து ரூ. 0.50 இற்கும் அதன் பின்னர் 1993 நவெம்பரில் ரூ. 0.25 இற்கும் குறைக்கப்பட்டமை இதற்கான ஓரளவு காரணமாக அமைந்தது.

1992 சனவரியில் விதிக்கப்பட்ட பாதுகாப்புத் தீர்வை 1993 இல் ரூ. 65,660 இலட்சத்தை உருவாக்கியதோடு இது முன்னைய ஆண்டின் 0.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.3 சதவீதமாக அமைந்தது. 1992 மேயில் இத்தீர்வை 1 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையின் பெருமளவு காரணமாக 1993 இல் பாதுகாப்புத் தீர்வையிலிருந்தான அரசிறை உறுதிப்படுத்தப்பட்டதோடு அதன் முழு ஆண்டிற்குமான தாக்கம் ஆய்வுக்குரிய ஆண்டில் உணரப்பட்டது. இந்த வரியின் விலக்களிப்புக்கள் ஏற்றுமதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் பாதுகாப்புத் தீர்வையானது எழுச்சிமிக்க அரசிறை மூலமொன்றாக மாறியுள்ளது.

1992 திசெம்பரில் தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் ஏற்றுமதித் தீர்வைகள் அகற்றப்பட்டமையையும் 1993 மேயில் இரும்புக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் போன்றனவற்றின் மீது எஞ்சியிருந்த ஏற்றுமதித் தீர்வைகளும் அகற்றப்பட்டதையும் தொடர்ந்து 1993 இல் அரசிறை மூலமொன்றான ஏற்றுமதித் தீர்வை முழுமையாகவே மறைந்துவிட்டது. இதன்படி ஏற்றுமதித் தீர்வையிலிருந்தான அரசிறை 1992 இன் ரூ. 8,210 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 570 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1993 இல் இறக்குமதி 26 சதவீதத்தினால் விரைவாக வளர்ச்சியடைந்தபோதும் ரூ. 206,150 இலட்சமாக விளங்கிய இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே பெரும்பாலும் மாறாது காணப்பட்டது. இதன் விளைவாக 1991 இன் 14.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 13.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் அதாவது இறக்குமதித் தீர்வைக்கும் இறக்குமதிகளின் பெறுமதிகளுக்கும் இடையிலான விகிதம் 1993 இல் 10.6 சதவீதத்திற்குக் கடுமையாக வீழ்ச்சிடைந்தது. இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பின் கவர்ச்சியற்ற செயலாற்றத்திற்குப் பலதரப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கான தனிப்பட்ட முறையில் அமைந்த தீர்வை விலக்களிப்புக்களையும் இவ்வாண்டில் முதலீட்டுச் சபையின் கீழ் வரும் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற சலுகைகளையும் பெருமளவு காரணமாகக் குறிப்பிடலாம். இதன்படி இரு ஆண்டுகளுக்குமிடையில் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி ரூ. 1,535,550 இலட்சத்திலிருந்து ரூ. 1,935,500 இலட்சத்திற்கு அதிரித்திருந்தபோதும் தீர்வைக்குட்படுத்தப்பட வேண்டிய இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி 1992 இன் ரூ. 757,880 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 737,370 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மேலும் 1993 இல் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி விரைந்து அதிகரித்த போதிலும் அதிஉயர்ந்த தீர்வைக்குட்பட்ட நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 16 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தன. எனினும் தாழ்ந்த இறக்குமதித் தீர்வைகளைக் கொண்ட முதலீட்டுப் பொருட்கள் 35 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன்படி, இறக்குமதி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் 1993 இல் இறக்குமதித் தீர்வையிலிருந்தான அரசிறையின் மந்த நிலைக்குப் பங்களிப்புச் செய்தன. இதேவேளையில் தீர்வை அமைப்பு முறையினை நியாயப்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கையாக குறித்துரைக்கப்பட்ட அதியுயர் தீர்வைகளைக் கொண்டிருந்த புடவைகளின் மீதான தீர்வையானது 1993 ஏப்பிறலில் 100 சதவீத பெறுமான விகித வரிக்குமாற்றப்பட்டதுடன் 1993 இன் நவெம்பரில் 50 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது. மேலும், உந்து ஊர்திகள் மீதான தீர்வை 50 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையிலான வீச்சுக்கிடையில் குறைக்கப்பட்டது. இதேவேளையில் 1993 நவெம்பரில் நான்கு படிநிலைகளிலான வீத அமைப்புமுறை (10, 20, 35, 50) ஆகக்கூடிய பெயரளவு வீதமான 50 சதவீதத்திலிருந்து 45 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையும் 1993 இல் இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பின் மந்த நிலைக்குப் பங்களிப்புச் செய்தது. சுங்கத் தீர்வைகளின் இந்த மறுசீரமைப்புகள் ஏற்றுமதித் தீர்வைகள் நீக்கப்பட்டதுடன் இணைந்து அரசின் அரசிறை நோக்கங்களுக்காகப் பன்னாட்டு வர்த்தகத்தை நம்பியிருத்தலைக் குறைக்கும் நடைமுறையிலுள்ள வரி மறுசீரமைப்புக்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காட்டின.

1993 இல் வருமான வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 136,580 இலட்சத்தினை உருவாக்கியதுடன் 1992 இனைவிட 25 சதவீதம் கொண்ட செழிப்பான அரசிறை வளர்ச்சியினைப் பிரதிபலித்தது. 1993 இன் நடுப்பகுதியில் கூட்டுத்தாபன ஊழியர்களின் மீது உழைக்கும்போதே செலுத்தும் வரி விதிக்கப்பட்டமை, தனியார்துறை ஊழியர்களுக்கு உயர்ந்த ஊதியங்கள் வழங்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக ரூ. 52,720 இலட்சமாக விளங்கிய தனியாள் வருமான வரிகள் 30 சதவீதமான குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டின. இதேவேளையில் கூட்டு வருமான வரிவீதம் 1992 இன் 45 சதவீதத்திலிருந்து 1993 ஏப்பிறலில் 40 சதவீதத்திற்கு

குறைக்கப்பட்டமை மற்றும் கட்டடங்களுக்கும் மோட்டார் வாகனங்களுக்குமான பெறுமானத்தேய்வுச் சலுகைகள் முறையே 10, 4 ஆண்டுகளிலிருந்து 15, 6 ஆண்டுகளுக்கு நியாயப்படுத்தப்பட்டமை என்பனவற்றின் மத்தியிலும் கூட்டுவருமானவரிகள் ரூ. 73,860 இலட்சமாக விளங்கி மிதமான 7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.

1993 இல் முத்திரைத் தீர்வைகள் ரூ. 34,540 இலட்சத்தினை உருவாக்கி முன்னைய ஆண்டைவிட 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதேவேளையில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளின் மீதான திருப்பிச் செலுத்தப்படவேண்டியதல்லாத வரி ரூ. 10,730 இலட்சமாக விளங்கி 50 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சிடைந்து 1993 இல் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளில் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலித்தது. அரசிறையின் புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.56 இல் தரப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுக் கொடைகள்

1993 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 80,250 இலட்சமாக விளங்கி 3 சதவீதமான சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதன்விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான வெளிநாட்டுக் கொடைகள் 1991 இன் 2.1 சதவீதத்திலிருந்து 1992 இல் 1.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1993 இல் 1.6 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. ரூ. 51,210 இலட்சமாக விளங்கிய செயற்றிட்டக் கொடைகளின் மீதான பெறுகைகள் 15 சதவீத வீழ்ச்சியைக் காட்டியவேளையில் ரூ. 13,370 இலட்சமாக விளங்கிய பண்ட, மற்றும் உணவு உதவிக் கொடைகள் 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. முன்னைய ஆண்டைப் போலவே யப்பானும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுமே தொடர்ந்தும் பாரிய கொடையாளர்களாக விளங்கி இலங்கைக்கான கொடைகளில் 70 சதவீதத்தினை வழங்கின.

## செலவினம்

மொத்தச் செலவு ரூ. 1,386,040 இலட்சமாக விளங்கி 1992 இனைவிட 18 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. ரூ. 1,009,510 இலட்சமாக விளங்கிய நடைமுறைச் செலவு முன்னைய ஆண்டின் 77 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவில் 73 சதவீதத்திற்கு வகைகூறியது. பொருட்களினதும் பணிகளினதும் கொள்வனவின் மீதான நடைமுறைச்செலவு நடைமுறைச் செலவில் பெரும்பங்கொன்றிற்கு வகைகூறியது. இதேவேளையில் ரூ. 395,690 இலட்சமாக விளங்கிய அரச முதலீடுகள், வீதிகளும் பெருந்தெருக்களும், நீர் வழங்கலும் வடிகாலமைப்புப், தொடர்பூட்டல் பணிகள், கல்வி மற்றும் நலம் என்பனவற்றில் பெருமளவு செறிவாகக் காணப்பட்டு 1993 இல் 27 சதவீத வளர்ச்சியயைப் பதிவுசெய்தன. அரச செலவின் பொருளாதாரப் பகுப்பாய்வு அட்டவணை 1.57 இல் தரப்பட்டுள்ளது.

## நடைமுறைச் செலவு

நடைமுறைச் செலவு ரூ. 1,009,500 இலட்சமாக இருந்து 13 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்து, 1993 இல் பெயரளவு உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பினைவிட சிறிதளவு குறைவானதாக விளங்கியது. சம்பளங்களினதும், கூலிகளினதும், ஏனைய பொருட்கள் பணிகளினதும் வடிவிலமைந்த பொருட்கள், பணிகளின் கொள்வனவு மீதான செலவு ரூ. 451,710 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15 சதவீத வளர்ச்சியைக் கண்டது. நடைமுறைச் செலவில் 29 சதவீதத்திற்கு வகைகூறிய அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 11 சதவீத வளர்ச்சியைக் காட்டின. முன்னைய ஆண்டின் வீழ்ச்சிக்கு மாறாக குடியிருப்பாளர்களுக்கான மாற்றல் கொடுப்பனவுகள் 1993 இல் நடைமுறைச் செலவில் ஐந்தில் ஒரு பாகத்தினைக் கொண்டிருந்ததோடு 1992 இனைவிட 14 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தன.

அண்மைக்காலங்களில் பின்பற்றப்பட்ட கூலிக் கட்டுப்பாட்டினைத் தளர்த்தும் வகையில் 1993 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது ரூ. 500 இற்குஉட்பட்ட 30 சதவீத சம்பள அதிகரிப்பு ஒன்றை அரசு அறிவித்தது. எனினும், வரவு செலவுத் திட்டச் சுமையினை மிகக்குறைவாக்கும் நோக்கில் இந்த அதிகரிப்பானது 1993 சனவரியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலப்பகுதியில் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி நிறைவேற்றுத்தரமல்லா வகையினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு 1993 சனவரியிலிருந்து பயனுறும் வகையில் இவ்வதிகரிப்பில் 60 சதவீதம் வழங்கப்பட்ட வேளையில் எஞ்சிய தொகை 1993 யூலையிலிருந்து வழங்கப்பட்டது. நிறைவேற்றுத்தர வகையினைப் பொறுத்தவரையில் 1993 சனவரியிலிருந்து பயனுறும் வகையில் சம்பள அதிகரிப்பில் 50 சதவீதம் வழங்கப்பட்டவேளையில் எஞ்சிய தொகை 1994 சனவரிக்குப் பிற்போடப்பட்டது. அரசஊழியர்களின் சம்பளத்தின் கட்டம் கட்டமான அதிகரிப்பானது சம்பளங்கள், கூலிகள் ' மீதான செலவினத்தை ரூ. 259,710 இலட்சத்திற்குக் கட்டுப்படுத்த அரசுக்கு இயலச்செய்ததோடு இது முன்னைய ஆண்டைவிட ரூ. 51,780 இலட்சம் அல்லது 25 சதவீத அதிகரிப்பாகவுமிருந்தது. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொடர்பில் சம்பளங்கள் மீதான செலவினம் 1992 இன் 4.9 சதவீதத்திலிருந்து 1993 இல் 5.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பலதரப்பட்ட பொருட்களின் கொள்வனவு, பயணம், வழங்கல்கள் மற்றும் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய பொருட்கள், பணிகள் மீதான செலவு தேவையற்றதும் முன்னுரிமையற்றதுமான செலவைக் குறைத்தல், மேம்பட்ட காசு முகாமைத்துவம் என்பனவற்றினூடாக 2 சதவீதமான வளர்ச்சிக்கு மட்டுப்படுத்தப்பட்டு ரூ. 192,000 இலட்சத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பில் இச் செலவுகள் முன்னைய ஆண்டின் 4.4 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருட்கள், பணிகள் மீதான செலவினத்தை மிகக் குறைக்கும் நோக்கிலான உறுதியான சீராக்க முயற்சிகள் 1993 இல் சம்பளங்கள், கூலிகள் மீதான அதிகரித்த சுமையின் மத்தியிலும் பொருட்கள், பணிகளின் மீதான மொத்தச் செலவினத்தை 1992 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.3 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதத்திற்குக் குறைத்துக்கொள்ள அரசுக்கு இயலச் செய்தன.

*அட்டவணை 1.57*

## செலவு, மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ப.இ. ரூபாய்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1993 தற்காலிகம் | 1994 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைச் செலவு ... | **56,884** | **71,771** | **83,756** | **89,638** | **97,437** | **100,950** | **109,368** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் ... | 25,508 | 30,167 | 35,848 | 39,691 | 42,702 | 45,171 | 47,936 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 14,446 | 15,748 | 17,985 | 20,793 | 23,185 | 25,971 | 27,851 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 11,062 | 14,419 | 17,863 | 18,898 | 19,517 | 19,200 | 20,085 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... | 14,352 | 20,668 | 22,073 | 25,940 | 30,921 | 28,926 | 33,862 |
| வெளிநாட்டு ... | 3,337 | 3,678 | 4,113 | 4,739 | 4,602 | 5,183 | 5,904 |
| உள்நாட்டு ... | 11,015 | 16,990 | 17,960 | 21,201 | 26,319 | 23,743 | 27,958 |
| நடைமுறை மாற்றங்களும் உதவு தொகைகளும் ... | 17,024 | 20,936 | 25,835 | 24,007 | 25,829 | 26,853 | 27,570 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 22,83 | 2,639 | 1,743 | 1,428 | 1,472 | 1,357 | 2,196 |
| பொது நிறுவனங்களுக்கு | 1,696 | 1,811 | 1,405 | 1,649 | 2,101 | 2,029 | 2,360 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 902 | 1,237 | 1,050 | 1,111 | 1,123 | 896 | 1,060 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... | 12,143 | 15,249 | 21,637 | 19,819 | 21,133 | 22,571 | 21,954 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன ... | 3,932 | 5,122 | 4,023 | 4,466 | 4,275 | 4,558 | 3,609 |
| சனசக்தி ... | 705 | 2,912 | 3,407 | 3,098 | 5,150 | 3,647 | 3,906 |
| ஓய்வூதியங்கள் ... | 4,735 | 4,490 | 8,832 | 8,099 | 9,148 | 10,460 | 10,877 |
| வளமாக்கி உதவு தொகை ... | 796 | – | – | – | – | – | – |
| ஏனைய ... | 1,975 | 2,725 | 5,375 | 4,156 | 2,560 | 3,906 | 3,562 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | -2,015 | – | – |
| மூலதனச் செலவு ... | **20,750** | **19,529** | **25,305** | **24,949** | **35,435** | **33,778** | **35,233** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... | 13,069 | 12,025 | 14,072 | 12,604 | 21,050 | 20,633 | 20,595 |
| மூலதன மாற்றல்கள் ... | 7,681 | 7,504 | 11,233 | 12,345 | 14,385 | 13,145 | 14,638 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 1,499 | 1,249 | 2,993 | 4,610 | 5,358 | 4,311 | 4,139 |
| பொது நிறுவனங்களுக்கு ... | 5,354 | 5,303 | 6,990 | 6,663 | 8,276 | 7,753 | 9,673 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 799 | 843 | 950 | 1,028 | 708 | 1,036 | 708 |
| ஏனையவை ... | 29 | 109 | 300 | 44 | 43 | 45 | 118 |
| **மீள்கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல்** | **4,530** | **8,514** | **10,467** | **2,386** | **9,044** | **3,876** | **9,619** |
| முற்பணக் கணக்குகள் ... | -993 | 1,699 | 1,819 | -150 | 500 | 250 | 250 |
| கடன் வழங்கல் ... | 5,901 | 7,219 | 7,286 | 6,246 | 10,109 | 5,791 | 12,013 |
| மீளமைப்புச் செலவு ... | – | – | 3,335 | 1,750 | 600 | 1,465 | 3,392 |
| தனியார்மயமாக்கலிற் பெற்றபேறு ... | – | – | -841 | -2,850 | -500 | -1,200 | -3,000 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் ... | -378 | -404 | -1,132 | -2,610 | -1,665 | -2,430 | -3,036 |
| **மொத்த செலவும் தேறிய கடன் வழங்கலும்** | **82,164** | **99,814** | **119,528** | **116,973** | **141,916** | **138,604** | **154,220** |

(தொடரும்)

அட்டவணை 1.57 (தொடர்ச்சி)

## செலவு, மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு
## (மொ.உ.உ. இன் சதவீதமாக)

ப.இ. ரூபாய்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1993 தற்காலிகம் | 1994 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு ...** | **22.6** | **22.3** | **22.5** | **21.1** | **19.7** | **20.3** | **19.2** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் ... | 10.1 | 9.4 | 9.6 | 9.3 | 8.6 | 9.1 | 8.4 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 5.7 | 4.9 | 4.8 | 4.9 | 4.7 | 5.2 | 4.9 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 4.4 | 4.5 | 4.8 | 4.4 | 3.9 | 3.9 | 3.5 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... | 5.7 | 6.4 | 5.9 | 6.1 | 6.2 | 5.8 | 6.0 |
| வெளிநாட்டு ... | 1.3 | 1.1 | 1.1 | 1.1 | 0.9 | 1.0 | 1.0 |
| உள்நாட்டு ... | 4.4 | 5.3 | 4.8 | 5.0 | 5.3 | 4.8 | 4.9 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் ... | 6.8 | 6.5 | 6.9 | 5.6 | 5.2 | 5.4 | 4.8 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 0.9 | 0.8 | 0.5 | 0.3 | 0.3 | 0.3 | 0.4 |
| பொது நிறுவனங்களுக்கு | 0.7 | 0.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 0.4 | 0.4 | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... | 4.8 | 4.7 | 5.8 | 4.7 | 4.3 | 4.5 | 3.9 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன | 1.6 | 1.6 | 1.1 | 1.0 | 0.9 | 0.9 | 0.6 |
| சனசக்தி ... | 0.3 | 0.9 | 0.9 | 0.7 | 1.0 | 0.7 | 0.7 |
| ஓய்வூதியங்கள் ... | 1.9 | 1.4 | 2.4 | 1.9 | 1.8 | 2.1 | 1.9 |
| வளமாக்கி உதவு தொகை ... | 0.3 | – | – | – | – | – | – |
| ஏனையவை ... | 0.8 | 0.8 | 1.4 | 1.0 | 0.5 | 0.8 | 0.6 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | -0.4 | – | – |
| **மூலதனச் செலவு ...** | **8.2** | **6.1** | **6.8** | **5.9** | **7.2** | **6.8** | **6.2** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... | 5.2 | 3.7 | 3.8 | 3.0 | 4.3 | 4.2 | 3.6 |
| மூலதன மாற்றல்கள் ... | 3.0 | 2.3 | 3.8 | 2.9 | 2.9 | 2.6 | 2.6 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 0.6 | 0.4 | 0.8 | 1.1 | 1.1 | 0.9 | 0.7 |
| பொது நிறுவனங்களுக்கு ... | 2.1 | 1.6 | 1.9 | 1.6 | 1.7 | 1.6 | 1.7 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 0.3 | 0.3 | 0.3 | 0.2 | 0.1 | 0.2 | 0.1 |
| ஏனையவை ... | – | – | 0.1 | – | – | – | – |
| **மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல் ...** | 1.8 | 2.6 | 2.8 | 0.6 | 1.8 | 0.8 | 1.7 |
| இதில் முற்பணக் கணக்குகள் ... | -0.4 | 0.5 | 0.5 | ... | 0.1 | 0.1 | ... |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ...** | **32.6** | **31.0** | **32.1** | **27.5** | **28.7** | **27.9** | **27.1** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 289,260 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீத மெதுவான வளர்ச்சியினைப் பதிவு செய்தன. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிச் செலவு 1992 இன் ரூ. 212,010 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 237,430 இலட்சத்திற்கு அதிகரித்து 1992 இன் 18 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத மிதமான வளர்சியைப் பதிவு செய்தது. 1992 இன் ரூ. 29,790 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் அரச பிணைகளின் பயன்பாடு ரூ. 82,000 இலட்சத்தினால் அதிகரித்த வேளையில் அரச பிணைகளின் மீதான வட்டிவீதங்களும் 1992 இன் 15 சதவீத - 17 சதவீத வீச்சிலிருந்து 1993 இல் 16 சதவீத – 18.5 சதவீத வீச்சுக்கும் அதிகரித்த போதிலும், ரூபாப் பிணைகளில் பெரும்பாலானவை ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் திரட்டப்பட்டமையினால் நடுத்தரகால, நீண்டகாலக் கடன்களின் மீதான வட்டிச் செலவுகள் மிதமான 16 சதவீத வளர்ச்சியைக் குறித்துக் காட்டின. ரூபாப் பிணைகளின் மீதான வட்டிக் கொடுப்பனவு ஆண்டிற்கு இருமுறை மேற்கொள்ளப்படுகின்றமையினால் 1994 இல் இக்கடன்களின் மீதான வட்டிச் சுமை மேலுமதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில், 1993 இல் திறைசேரி உண்டியல்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டின் ரூ. 141,280 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த தொகையொன்றான ரூ. 101,000 இலட்சத்தினால் அதிகரித்தபோதிலும் குறுங்காலப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 129,710 இலட்சமாக அமைந்து. 1993 இல் 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியமைக்கு 1992 இன் ஆண்டொன்றுக்கு 18.88 – 18.99 சதவீத வீச்சிலிருந்து 1993 இல் ஆண்டொன்றுக்கு 19.35 – 19.38 சதவீத வீச்சுக்கு அதிகரித்த திறைசேரி உண்டியல்கள் மீதான பொதுவான உயர்விளைவு வீதங்களே காரணமாகும். ரூ. 51,830 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிச் செலவு முன்னைய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 9 சதவீத அதிகரிப்பைக் கண்டது. வெளிநாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் 1992 இன் 2.0 சதவீதத்திலிருந்து 1993 இல் 1.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து அரசுக்கான வெளிநாட்டுப் படுகடனில் சலுகை அடிப்படையிலான கூறில் காணப்பட்ட மேலதிக முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது.

1993 இல் ரூ. 268,530 இலட்சமாக விளங்கிய மொத்த மாற்றல் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 7 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 12 சதவீத அதிகரிப்பைக் காட்டின. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மாற்றல் கொடுப்பனவுகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 5.6 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த மாற்றல் கொடுப்பனவுகளில் கிட்டத்தட்ட 40 சதவீதத்திற்கு வகைகூறி ரூ. 104,600 இலட்சமாக விளங்கிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 1993 இல் 29 சதவீத அதிகூடிய அதிகரிப்பைப் பதிவுசெய்து 1993 சனவரியிலிருந்து மாதாந்த ஓய்வூதியப்படிகளில் ஏற்பட்ட ரூ. 300 கொண்ட அதிகரிப்பினையும் 1993 யூனில் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியின் ரூ. 260 கொண்ட அதிகரிப்பையும் 1993 இறுதியில் 305,000 ஆக விளங்கிய ஓய்வூதியம் பெறுவோரின் தொடர்ச்சியான அதிகரிப்பையும் பிரதிபலித்தன. இதேவேளையில் உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகள், மதிய உணவு, சீருடைகள் மற்றும் சனசக்தி என்பனவற்றை உள்ளடக்கிய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான செலவு ரூ. 83,760 இலட்சமாக விளங்கி உணவு

மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகள் என்பனவற்றின் செலவினை மிதப்படுத்தியதன் காரணமாக 5 சதவீத அதிகரிப்பை மட்டுமே காட்டியது. இதன்படி இந்த நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான செலவு 1992 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்திலிருந்து 1993 இல் 1.6 சதவீதத்திற்கு வீழ்ச்சிடைந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதிகள் மீதான செலவினையும் உள்ளடக்கிய ஏனைய குடியிருப்பாளர் மாற்றல்கள் மீதான செலவு ரூ. 23,670 இலட்சமாக விளங்கியது.

தொழிற்பாட்டு பகுப்பாய்வின் நியதிகளில், கல்வி, சுகாதாரம், நலன்புரி, வீடமைப்பு மற்றும் சனசமூகப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பணிகளின் வழங்கலுக்காக ஏற்பட்ட நடைமுறைச் செலவு ரூ. 373,550 இலட்சமாக விளங்கி 1993 இல் 14 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. எனினும் அத்தகைய செலவுகள பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் குறைவாக அமைந்தமையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பில் 1992 இன் 7.7 சதவீதத்திலிருந்து 1993 இல் 7.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. கல்வி மீதான செலவு மிதமான 6 சதவீத வளர்ச்சியைக் காட்டியவேளையில், நலப் பணிகள் மீதான நடைமுறைச் செலவு 26 சதவீத அதிகூடிய அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. சிறப்பாக, குடித்தொகையின் குறைந்த வருமானம் பெறுவோருக்குப் பலதரப்பட்ட பணிகளை வழங்கும் நலன்புரிச் செலவுகளும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மாற்றங்களும் ரூ. 201,480 இலட்சமாக விளங்கி 1993 இல் 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் விரிவாக்கமே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. ரூ. 275,640 இலட்சமாக விளங்கிய பொது நிருவாக பாதுகாப்பு நடைமுறைச் செலவுகள் 1992 இன் 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5 சதவீதத்திற்கு வகைகூறி பல்வகைச் செலவினங்களில் பொது நிருவாகத்தின் மீதான கட்டுப்பாடுகளைப் பிரதிபலித்தன. இதேவேளையில் ரூ. 201,590 இலட்சமாக விளங்கிய பாதுகாப்புச் செலவுகள் 16 சதவீத வளர்ச்சியைக் காட்டி 1992 இன் 4.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீத விகிதமொன்றைப் பேணியது. இதேவேளையில் வேளாண்மை நீர்ப்பாய்ச்சல், கடற்றொழில், போக்குவரத்து, தொடர்பூட்டல் பணிகள் மற்றும் வர்த்தகமும் வாணிபம் போன்ற பொருளாதாரப் பணிகளின் பேணலுக்காக வழிப்படுத்தப்பட்ட பொருளாதாரப் பணிகளின் மீதான நடைமுறைச் செலவு 7 சதவீத மிதமான அதிகரிப்பைக் காட்டியது. அரச செலவின் தொழிற்பாட்டுரீதியான பகுப்பாய்வு அட்டவணை 1.58 இல் தரப்பட்டுள்ளது.

### மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும்

1993 இல் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 376,530 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 395,690 இலட்சம் கொண்ட அதிகரித்த அரச முதலீட்டினதும், தனியார் மயப்படுத்தலினதும் அரச பொதுக்கூட்டுத்தாபனங்களின் கடன்கள் மீட்கப்பட்டமையிலிருந்தும் கிடைத்த பெறுகைகளின் பெருமளவு காரணத்தினால் ஏனைய பொறுப்புக்கள் ரூ. 19,150 இலட்சத்தால் குறைக்கப்பட்டமையினதும் இணைந்த விளைவாகும். பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் முக்கிய அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் நிருமாணம் மற்றும் மூலதனச் சொத்துக்களின் அபிவிருத்திக்காக நேரடியாகச் செலவிடப்பட்ட தொகை முன்னைய ஆண்டின் ரூ.126,040 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல்

அட்டவணை 1.58

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | | 1994 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| நடைமுறைச் செலவு | | | | | | | |
| பொது அரச பணிகள் ... | 14,090 | 17,942 | 19,811 | 24,453 | 24,359 | 27,564 | 27,214 |
| பொது நிருவாகம் ... | 6,781 | 6,622 | 5,612 | 7,099 | 7,942 | 7,405 | 8,517 |
| பாதுகாப்பு ... | 4,073 | 6,736 | 10,317 | 12,876 | 12,312 | 15,413 | 13,351 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் ... | 3,236 | 4,585 | 3,882 | 4,478 | 4,105 | 4,746 | 5,346 |
| சமூகப் பணிகள் ... | 19,976 | 24,449 | 31,594 | 32,700 | 34,989 | 37,355 | 39,604 |
| கல்வி ... | 6,612 | 8,529 | 7,951 | 10,533 | 10,725 | 11,211 | 12,355 |
| நலத்துறை ... | 3,381 | 3,685 | 4,110 | 4,518 | 5,498 | 5,711 | 6,471 |
| நலன்புரி ... | 9,750 | 11,973 | 19,266 | 17,378 | 17,786 | 20,148 | 20,250 |
| வீடமைப்பு ... | 17 | – | – | – | – | – | – |
| சமூகப் பணிகள் ... | 216 | 262 | 267 | 271 | 980 | 285 | 528 |
| பொருளாதாரப் பணிகள் ... | 4,579 | 5,137 | 3,925 | 3,834 | 4,891 | 4,111 | 5,590 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... | 976 | 982 | 912 | 1,398 | 1,340 | 1,483 | 2,017 |
| கடற்றொழில் ... | 47 | 46 | 98 | 68 | 806 | 107 | 83 |
| தயாரிப்பும்சுரங்கமகழ்தலும் ... | 408 | 181 | 231 | 349 | 288 | 403 | 356 |
| வலுவும் நீர்வழங்கலும் ... | 416 | 345 | 659 | 133 | 289 | 93 | 297 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... | 1,138 | 2,600 | 1,308 | 1,208 | 1,355 | 1,129 | 1,944 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 950 | 159 | 137 | 232 | 163 | 203 | 158 |
| ஏனையவை ... | 645 | 824 | 580 | 446 | 650 | 693 | 735 |
| ஏனையவை ... | 18,240 | 24,241 | 28,425 | 28,652 | 35,214 | 31,920 | 36,961 |
| இதில் வட்டி ... | 14,352 | 20,668 | 22,073 | 25,940 | 30,921 | 28,926 | 33,862 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | -2,015 | – | – |
| **மொத்த நடைமுறைச் செலவு ...** | **56,884** | **71,770** | **83,756** | **89,639** | **97,437** | **100,951** | **109,367** |

(தொடரும்)

அட்டவணை 1.58 (தொடர்ச்சி)

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | | 1994 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
| மூலதனச் செலவும் கடன் வழங்கலும் | | | | | | | |
| பொது அரச பணிகள் ... | 2,503 | 3,617 | 2,422 | 1,970 | 3,543 | 4,085 | 3,522 |
| பொது நிருவாகம் ... | 2,002 | 1,599 | 1,680 | 1,256 | 2,804 | 3,463 | 2,719 |
| பாதுகாப்பு ... | 501 | 2,018 | 742 | 741 | 739 | 622 | 803 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் ... | 3,667 | 3,019 | 2,964 | 6,137 | 7,744 | 6,075 | 8,056 |
| சமூகப் பணிகள் ... | 1,529 | 1,042 | 1,178 | 2,008 | 3,057 | 2,845 | 3,014 |
| கல்வி ... | 1,258 | 1,279 | 1,119 | 2,023 | 2,285 | 1,353 | 2,460 |
| நலத்துறை ... | 10 | 25 | 15 | 1,191 | 1,348 | 1,084 | 1,289 |
| நலன்புரி ... | 787 | 513 | 535 | 767 | 854 | 604 | 1,070 |
| வீடமைப்பு ... | 83 | 160 | 117 | 148 | 200 | 189 | 223 |
| சமூகப் பணிகள் ... | 22,129 | 18,798 | 26,022 | 20,444 | 31,680 | 22,352 | 34,844 |
| பொருளாதாரப் பணிகள் ... | 5,234 | 5,215 | 6,071 | 5,890 | 6,723 | 5,093 | 5,308 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... | 2,475 | 1,810 | 2,410 | 2,670 | 2,676 | 2,221 | 2,504 |
| கடற்றொழில் ... | 283 | 133 | 181 | 175 | 286 | 124 | 381 |
| தயாரிப்பும்சுரங்கமகழ்தலும் ... | 471 | 120 | 171 | 184 | 137 | 1,457 | 72 |
| வலுவும் நீர்வழங்கலும் ... | 4,719 | 6,132 | 6,181 | 5,527 | 9,031 | 4,268 | 7,831 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... | 6,666 | 4,319 | 10,921 | 4,363 | 8,490 | 9,303 | 15,923 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 50 | 205 | 218 | 365 | 366 | 364 | 413 |
| ஏனையவை ... | 2,230 | 2,674 | 2,279 | 3,940 | 6,647 | 1,743 | 4,916 |
| ஏனையவை ... | 828 | 952 | 1,250 | 1,072 | 751 | 1,081 | 826 |
| **மொத்த மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | **26,651** | **26,387** | **32,658** | **29,622** | **43,719** | **33,592** | **47,247** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

ரூ. 206,330 இலட்சமாக விளங்கியது. அத்தகைய பணிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக கல்வி மற்றும் நலத்துறை அமைச்சுக்களினால் ரூ. 371,100 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது.

நியதிச் சபைகளினாலும் அரச கூட்டுத்தாபனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அரச முதலீட்டுச் செயற்றிட்டங்கள் 1992 இன் ரூ. 112,730 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 120,640 இலட்சத்தினைக் கொண்டிருந்தன. வீதி அபிவிருத்தி, நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் துறைமுகப் பணிகள் மற்றும் மகாவலி அபிவிருத்தி என்பனவற்றினை இந்த வகையின் கீழான பாரிய மூலதனச் செயற்றிட்டங்கள் உள்ளடக்கியிருந்தன.

அரசிடமிருந்து பெற்ற கடன்களைப் பயன்படுத்தி அரச கூட்டுத்தாபனங்களினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு ரூ. 57,910 இலட்சமாக விளங்கி, இலங்கை மின்சபை அதற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டைக் கணிசமான அளவு குறைவாகப் பயன்படுத்தியமையின் காரணமாக வீழ்ச்சியினைக் காட்டியது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ரூ. 45,400 இலட்சத்திற்கு எதிராக இலங்கை மின்சபையினால் செலவிடப்பட்ட உண்மையான தொகை ரூ. 14,700 இலட்சமாகும். இதேவேளையில் கடந்த காலங்களில் அரசினால் வழங்கப்பட்ட கடன்களின் பேரிலான மீள்கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூ. 26,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 24,300 இலட்சமாக விளங்கின.

மூலதனச் செலவினதும் வழங்கப்பட்ட கடன்களினதும் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வின் நியதிகளில் 1993 இல் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான மொத்த முதலீடு 1992 இன் ரூ. 204,440 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 223,520 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதன் விளைவாக மொ.உ. உற்பத்தியின் தொடர்பில் பொருளாதார உட்கட்டமைப்பிலான மீது அரச முதலீடு 4.8 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் பணிகள் துணைத்துறையின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவு 1993 இன் பொருளாதார உட்கட்டமைப்புக்கான மொத்த அரச முதலீட்டில் 42 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளையில் கல்வி, நலத்துறை மற்றும் ஏனைய சமூகநலப் பணிகளிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான அரச முதலீடு ரூ. 60,750 இலட்சமாக விளங்கி 1993 இல் சிறிதளவான 1 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. இதன்படி மொ. உ. உற்பத்தி தொடர்பில் அத்தகைய முதலீடு 1991 இன் 0.8 சதவீதத்திலிருந்து 1992 இல் 1.4 சதவீதத்திற்கு அதிகரித்து 1993 இல் 1.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொது நிருவாக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான மொத்த மூலதன முதலீடு 1992 இன் மொ. உ. உற்பத்தியின் 0.5 சதவீதத்திலிருந்து 1993 இல் 0.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டமானது ஆய்வுக்குரிய ஆண்டில் மேலும் முன்னேற்றத்தைக் காட்டியதோடு அரசுக்கு ரூ. 12,000 இலட்சம் கொண்ட தொகையினை உருவாக்கித் தந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை மட்பாண்டம், ருகுணு சீமெந்து, கொழும்பு சருவதேசப் பாடசாலை, வரையறுக்கப்பட்ட கோட்டல் சர்விசஸ், வரையறுக்கப்பட்ட இங்குரான சீனிக் கைத்தொழில்கள் என்பனவற்றை 1993 இல் உடைமைநீக்கப்பட்ட தொழில்

முயற்சிகள் உள்ளடக்கியிருந்தன. 1993 இல் வரையறுக்கப்பட்ட புத்தளம் சீமெந்துக் கம்பனி விற்பனை செய்யப்பட்டபோதிலும் ரூ. 11,380 இலட்சம் கொண்ட விற்பனைப் பெறுகைகள் 1994 இதிலேயே பெறப்பட்டன. 1993 இறுதிவரையில் உடைமை நீக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளினதும், அரசுடைமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளினதும் மொத்த எண்ணிக்கை முப்பத்தாறு ஆகும்.

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடல்

1993 இல் ரூ. 320,840 இலட்சமாக விளங்கிய வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை (கொடைகளின் பின்) முன்னைய ஆண்டின் ரூ. 125,660 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 91,720 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இப்பற்றாக்குறையினை நிதியிடுவதில் ரூ. 168,390 இலட்சம் கொண்ட தொகை வெளிநாட்டு மூலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டது. வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் முக்கியமாக செயற்றிட்டக் கடன்களின் வடிவில் அமைந்து ரூ.125,170 இலட்சமாகக் காணப்பட்டன. ரூ. 69,840 இலட்சம் கொண்ட தொகை மீளச்செலுத்தப்பட்டமையால் 1993 இல் தேறிய அடிப்படையில் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் ரூ. 98,550 இலட்சமாக விளங்கின. இது 1992 இனைவிட ரூ. 24,940 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகும். எனினும் அரச முதலீட்டில் உள்நாட்டு மூலங்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் மொத்தப் பற்றாக்குறையில் வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு 1992 இன் 50 சதவீதத்திலிருந்து 1993 இல் 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1993 இல் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாட்டிற்காக உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பெறுகைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட ரூ. 394,790 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 484,070 இலட்சமாக விளங்கின. உள்நாட்டு மூலங்களிலிருந்து மூலவளங்களைத் திரட்டுவதில் அரசு இவ்வாண்டில் குறுங்கால, நடுத்தர காலக் கடன் கருவிகள் இரண்டினையும் பயன்படுத்தியது. ரூபாக் கடன்களின் திரட்டலின் மூலம் மொத்தம் ரூ. 282,050 இலட்சம் கொண்ட தொகையொன்று கடனாகப் பெறப்பட்டது. எனினும் ரூ. 200,040 இலட்சம் கொண்ட கடன் மீளச்செலுத்தலின் காரணமாக ரூபாக் கடன்கள் மூலமான தேறிய கடன் பெறுகைகள் ரூ. 82,000 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ரூ. 52,210 இலட்ச அதிகரிப்பினைக்கொண்டிருந்தன. ஊழியர் சேமநிதியமே தொடர்ந்தும் ரூபாக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் தனிப்பெரும் உதவுநராக ரூ. 213,580 இலட்சத்தினை உதவுதொகையாக வழங்கி 1993 இல் ரூபாப் பிணைகளினூடாகத் திரட்டப்பட்ட தொகையின் நான்கில் மூன்று பங்கிற்கு வகைகூறியது. இதேவேளையில் 1993 இல் திறைசேரி உண்டியல்களின் வழங்கலின் மூலம் ரூ. 98,070 இலட்சம் கொண்ட மேலுமொரு தொகை திரட்டப்பட்டது. இரண்டு ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட ரூ. 37,530 இலட்சத்திற்கான திறைசேரி உண்டியல்களின் வழங்கலையும் இவை உள்ளடக்கியிருந்தன. திறைசேரி உண்டியல்களினூடான கடன் பெறுகைகள் ரூ. 98,070 இலட்சமாக விளங்கியபோதிலும் மத்திய வங்கியின் வலுவான திறந்த சந்தை நடவடிக்கைகளின் காரணமாக 1993 இல் திறைசேரி உண்டியல் உடைமைகளில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டு, மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளில் ரூ. 178,480 இலட்சத்திலான வீழ்ச்சியும் இடம்பெற்றது. எனினும் வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகளின்

அதிகரிப்பினைத் தொடர்ந்து, வங்கித் தொழில் முறையில் திறைசேரி உண்டியல்களின் தேறிய வீழ்ச்சி ரூ. 142,270 இலட்சமாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சியுடன் இணைந்த திறைசேரி உண்டியல்களின் மேலதிக வழங்கல்கள் திறைசேரி உண்டியல்களின் வங்கியல்லா உடைமைகளை ரூ. 201,020 இலட்சத்தினால் அதிகரிக்கச்செய்தன. இதன்படி வங்கியல்லா மூலங்களிலிருந்தான தேறிய கடன்பெறுகைகள் 1992 இன் ரூ. 210,790 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 283,080 இலட்சத்திற்கு அதிகரித்தன. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடலில் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களிலிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 15,740 இலட்சமாக விளங்கிய வேளையில் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் ரூ. 17,470 இலட்சமாக விளங்கின. மத்திய வங்கியுடனான தனது வைப்பு நிலுவைகளைக் குறைத்துக்கொண்டதன் மூலம் ரூ. 8,630 இலட்சம் கொண்ட தொகையொன்றினை அரசு பயன்படுத்தியது. எனினும், மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசுக்கு மத்திய வங்கியிலிருந்தான தேறிய கொடுகடன் ரூ. 136,640 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வர்த்தக வங்கிகளினுடனான அரசின் வைப்பு நிலுவைகள் ரூ. 27,720 இலட்சத்தினால் குறைக்கப்பட்டமையினதும் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 36,210 இலட்சத்தால் அதிகரித்தமையினதும் பெருமளவு காரணமாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு வர்த்தக வங்கிகளின் நிதியிடல் ரூ. 75,850 இலட்சத்தினால் அதிகரித்தது. இதன்படி 1993 இல் வங்கித்தொழில் முறையிலிருந்து அரசுபெற்ற தேறிய பெறுகைகள் ரூ. 60,790 இலட்சத்தினால் மட்டுமே வீழ்ச்சியடைந்தன.

**அரசபடுகடன்**

1993 இறுதியில் அரச படுகடன் ரூ. 4,835,680 இலட்சமாக விளங்கியது. தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிதித்துறை சீராக்க நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அரச வங்கிகள் இரண்டினையும மீளமைப்புச் செய்வதற்காக வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகளையும் இது உள்ளடக்கியுள்ளது. இம்முறிகள் நீங்கலாக மொத்த அரச படுகடன் ரூ. 4,594,800 இலட்சமாக விளங்கி 1992 இன் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 13 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மீளமைப்பு முறிகள் நீங்கலான உள்நாட்டுப் படுகடன் ரூ. 1,895,970 இலட்சமாக விளங்கி 1993 இன் மொத்தப் படுகடனில் 41 சதவீதத்திற்கு வகைகூறியது. இது முன்னைய ஆண்டின் 42 சதவீதத்திலிருந்தான ஒரு வீழ்ச்சியாகும். உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடன் (ஓராண்டுக்குக் குறைவான முதிர்ச்சிக்காலம்) ரூ. 1,018,450 இலட்சமாக விளங்கி 1992 இன் 58 சதவீதத்திலிருந்து 1993 இல் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் 1993 இல் ரூ. 877,520 இலட்சமாக விளங்கிய நடுத்தரகால, நீண்டகால படுகடன் உள்நாட்டுப் படுகடனில் அதனது பங்கை 1992 இன் 42 சதவீதத்திலிருந்து 1993 இல் 46 சதவீதத்திற்கு அதிகரித்துக்கொண்டது. வலுவான திறந்த சந்தை நடவடிக்கைகளின் காரணமாக மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட படுகடன் 1992 இன் 20 சதவீதத்திலிருந்து 1993 இல் 9 சதவீதத்திற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

இதேவேளையில் ரூ. 2,698,830 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் மீதான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டின் 10 சதவீத

## அரச படுகடனின் உள்ளடக்கம்




* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப்படுகடன்

இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.59

## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுப் படுகடன் ... | 117,561 | 133,898 | 152,119 | 170,020 | 213,685 |
| குறுகிய கால ... | 63,145 | 74,376 | 84,412 | 97,924 | 101,845 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 57,245 | 67,968 | 72,968 | 84,996 | 91,343 |
| ரூபாப் பிணைகள் ... | – | – | 4,000 | 4,000 | – |
| தற்காலிக முற்பணங்கள் ... | 5,900 | 6,408 | 7,444 | 8,928 | 10,502 |
| நடுத்தர நீண்டகால ... | 54,416 | 59,522 | 67,707 | 72,096 | 111,840 |
| ரூபாப் பிணைகள் (அ) ... | 54,217 | 54,677 | 62,823 | 65,180 | 105,707 |
| திறைசேரி உண்டியல்கள் ... | – | – | – | 2,100 | 5,853 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | – | 4,532 | 4,532 | 4,532 | – |
| திறைசேரிவைப்புச் சான்றிதழ்கள் ... | – | 109 | 153 | 102 | 114 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9 | 9 | 9 | 8 | 8 |
| ஏனையவை ... | 190 | 195 | 190 | 174 | 158 |
| படுகடன் கருவிகளின்படி ... | 117,562 | 133,898 | 152,120 | 170,020 | 213,685 |
| ரூபாப் பிணைகள் ... | 54,217 | 54,676 | 66,823 | 69,180 | 105,707 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 57,245 | 67,968 | 72,968 | 87,096 | 97,196 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | – | 4,532 | 4,532 | 4,532 | – |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ... | – | 109 | 153 | 102 | 114 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9 | 9 | 9 | 8 | 8 |
| தற்காலிக முற்பணங்கள் ... | 5,900 | 6,408 | 7,444 | 8,928 | 10,502 |
| ஏனையவை ... | 191 | 196 | 191 | 174 | 158 |
| நிறுவங்களின்படி ... | 117,562 | 133,898 | 152,120 | 170,020 | 213,684 |
| வங்கிகள் ... | 46,874 | 48,254 | 52,145 | 58,111 | 90,134 |
| மத்திய வங்கி ... | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 40,025 | 37,080 | 42,486 | 34,932 | 16,480 |
| ரூபாக் கடன்கள் ... | 27 | 18 | 10 | 6 | – |
| திறைசேரி உண்டியல்கள் ... | 34,098 | 30,654 | 35,032 | 25,998 | 5,978 |
| தற்காலிக முற்பணங்கள் ... | 5,900 | 6,408 | 7,444 | 8,928 | 10,502 |
| வர்த்தக வங்கி ... | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 6,849 | 11,175 | 9,659 | 23,179 | 73,654 |
| ரூபாக் கடன்கள் ... | 566 | 565 | 414 | 413 | 24,088 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 6,282 | 10,604 | 9,239 | 22,760 | 49,566 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | – | 5 | 5 | 5 | – |
| ஏனையவை ... | 1 | 1 | 1 | 1 | – |
| நிறுவனங்களின்படி ... | 6,849 | 11,175 | 9,659 | 23,179 | 73,654 |
| இலங்கை வங்கி ... | 1,707 | 6,841 | 6,791 | 15,753 | 40,333 |
| மக்கள் வங்கி ... | 3,265 | 2,062 | 2,182 | 2,938 | 15,690 |
| ஏனையவை ... | 1,877 | 2,272 | 686 | 4,488 | 17,630 |

(அ) ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகள் உட்பட

(தொடரும்)

அட்டவணை 1.59 (தொடர்ச்சி)

## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| கடன்கரைப்பு நிதியம் | 2,289 | 1,662 | 840 | 359 | 239 |
| ரூபாக் கடன்கள் | 2,289 | 1,662 | 840 | 359 | 239 |
| வங்கியல்லாத் துறை | | | | | |
| படுகடன் கருவிகளின்படி | 68,399 | 83,982 | 99,134 | 111,550 | 123,311 |
| ரூபாக் கடன்கள் | 51,335 | 52,432 | 65,559 | 68,402 | 81,379 |
| திறைசேரி உண்டியல்கள் | 16,865 | 26,710 | 28,697 | 38,338 | 41,652 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | – | 4,527 | 4,527 | 4,527 | – |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | – | 109 | 153 | 102 | 114 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 9 | 9 | 9 | 8 | 8 |
| ஏனையவை | 190 | 195 | 190 | 173 | 158 |
| நிறுவனங்களின்படி | 68,399 | 83,982 | 99,134 | 111,551 | 123,311 |
| தேசிய சேமிப்பு வங்கி | 18,856 | 24,089 | 26,558 | 30,782 | 37,767 |
| சேமிப்பு நிறுவனமும் தனிப்பட்டோரும் | 9,110 | 13,018 | 13,031 | 14,981 | 13,165 |
| ஊழியர் சேம நிதியம் | 31,648 | 36,851 | 45,862 | 54,563 | 65,645 |
| காப்புறுதி | 2,811 | 3,426 | 4,074 | 4,035 | 244 |
| நிதி நிறுவனங்கள் | 2,011 | 1,446 | 2,427 | 3,131 | 5,868 |
| ஏனையவை | 3,964 | 5,153 | 7,182 | 4,060 | 622 |
| திணைக்கள, அலுவல்சார் நிதி | 53 | 62 | 34 | 428 | 453 |
| வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் | 190 | 195 | 190 | 174 | 158 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் | 156,298 | 176,883 | 214,579 | 235,538 | 269,883 |
| வகைகளின்படி | 156,298 | 176,883 | 214,579 | 235,538 | 269,883 |
| செயற்றிட்டக் கடன்கள் | 113,120 | 132,338 | 166,149 | 185,003 | 215,064 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 43,178 | 44,545 | 48,430 | 50,536 | 54,819 |
| பண்டக் கடன்கள் | 41,117 | 43,393 | 46,037 | 48,550 | 52,768 |
| ஏனையவை | 2,061 | 1,152 | 2,393 | 1,986 | 2,051 |
| நிறுவனங்களின்படி | 156,298 | 176,883 | 214,579 | 235,538 | 269,883 |
| சலுகை அடிப்படையிலான கடன்கள் | 146,144 | 166,202 | 202,554 | 225,132 | 260,331 |
| பல்புடை | 48,698 | 59,526 | 78,084 | 91,067 | 109,325 |
| இருபுடை | 97,446 | 106,677 | 124,470 | 134,065 | 151,007 |
| வர்த்தகக் கடன்கள் | 10,154 | 10,680 | 12,024 | 10,406 | 9,551 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் | 333 | 107 | 1,260 | 1,094 | 1,065 |
| மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 273,859 | 310,780 | 366,698 | 405,558 | 483,568 |
| கடன் கரைப்பு நிதியம் நீக்கலான வெளிநின்ற மொத்த அரச படுகடன் | 271,570 | 309,119 | 365,858 | 405,199 | 483,329 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூ. 2,150,640 இலட்சமாக விளங்கிய செயற்றிட்டக் கடன்கள் தொடர்ந்தும் வெளிநாட்டுப் படுகடனில் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கு வகைகூறின. பெருமளவில் இருபுடைக் கடன்களின் வடிவிலமைந்த சலுகைக் கடன்கள் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 96 சதவீதத்தைக் கொண்டிருந்தன. அரச படுகடன் மீதான புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.59 இல் தரப்பட்டுள்ளது.

### உள்நாட்டுப் படுகடன்

1993 இல் மீளமைப்பு முறிகள் நீங்கலான உள்நாட்டுப் படுகடன் ரூ. 1,895,970 இலட்சமாக விளங்கி 1992 இன் கடன் இருப்பான ரூ. 1,700,200 இலட்சத்தினைவிட 12 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. குறுங்காலப் படுகடன் ரூ. 1,018,450 இலட்சமாக விளங்கி (ஓராண்டுக்குக் குறைவான முதிர்ச்சிக் காலம்) முன்னைய ஆண்டின் உயர்ந்த வளர்ச்சியாகிய 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் மிகக்குறைந்த 4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான தொடர்ச்சியான அதிகூடிய கடன்பெறுகைகளைப் பிரதிபலிக்கும் வகையில் திறைசேரி உண்டியல்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு 1992 இன் ரூ. 870,960 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 971,960 இலட்சத்திற்கு அதிகரித்து மீளமைப்பு முறிகள் நீங்கலான உள்நாட்டுப் படுகடனில் 51 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளையில் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களின் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 15,740 இலட்சத்தினால் ரூ. 105,020 இலட்சத்திற்கு அதிகரித்தது.

1992 இன் 2 - 3 ஆண்டுக் கால முதிர்ச்சிக்காலங்களுக்கு எதிராக 1993 இல் 4 - 5 ஆண்டுக்கால முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட ரூபாக் கடன்களின் வழங்கலுடன், 1993 இல் ரூ. 877,520 இலட்சமாக விளங்கிய நடுத்தர, நீண்டகால படுகடன் 22 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வரவு செலவுத் திட்டத் தேவைப்பாட்டில் பெரும்பங்கொன்று குறுங்கால திறைசேரி உண்டியல்களினூடாகத் திரட்டப்பட்டமையினால் 1992 இல் ரூ. 720,960 இலட்சமாக விளங்கிய நடுத்தரகால, நீண்டகாலப் படுகடன் மிதமான 6 சதவீத வளர்ச்சியை மட்டுமே பதிவுசெய்தது. முன்னைய ஆண்டின் ரூ. 23,570 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூபாப் பிணைகள், பாதுகாப்பு முறிகள் என்பனவற்றின் மீதான படுகடன் 1993 இல் ரூ. 119,070 இலட்சத்தினால் ரூ. 816,190 இலட்சத்திற்கு கணிசமாக அதிகரித்தது. 1993 இல் திரட்டப்பட்ட ரூபாக் கடன்களில் பெரும்பாலானவை முறையே நான்கிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சிக் காலங்களையும் ஆண்டொன்றுக்கு முறையே 16 சதவீத 16.5 சதவீத வட்டி வீதங்களையும் கொண்டிருந்தன. ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்துக்கான முதன்மை உதவுநராக ஊழியர் சேமநிதியம் தொடர்ந்து விளங்கி 1993 இல் ரூ. 213,580 இலட்சம் கொண்ட முதலீட்டினையும் கொண்டிருந்தது.

இதேவேளையில் 1993 இல் இரு அரச வங்கிகளுக்கும் அவற்றினது சொத்துக்களை மீள்மூலதனப்படுத்துவதற்காக ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டியில் ரூ. 240,880 இலட்சம் பெறுமதிகொண்ட 30 ஆண்டு முறிகளை அரசு வழங்கியது. இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட முறிகளின் பெறுமதி ரூ. 135,470 இலட்சமாக

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப்படுகடன்

இலங்கை மத்திய வங்கி

விளங்கியவேளையில் மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்டவை ரூ. 105,410 இலட்சம் பெறுமதியினைக் கொண்டிருந்தன.

ரூ. 240,880 இலட்ச மீளமைப்பு முறிகளையும் உள்ளடக்கி வங்கித்தொழில் துறையில் வைத்திருக்கப்பட்ட படுகடன் 1992 இன் ரூ. 581,110 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 901,340 இலட்சத்திற்கு அதிகரித்தது. நீண்டகால முறிகள் நீங்கலான படுகடன் கையிருப்பு ரூ. 660,460 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 14 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட படுகடன் 1993 இல் 53 சதவீதத்தினால் ரூபா 164,800 இலட்சத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்து ஆய்வுக்குரிய ஆண்டில் வலுவான திறந்த சந்தை நடவடிக்கைகளின் காரணமாக வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1992 இன் ரூ. 259,980 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 59,780 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தது. இதேவேளையில் வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட படுகடன் 1992 இன் ரூ. 231,790 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 736,540 இலட்சத்திற்கு அதிகரித்து இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 218 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இரு அரச வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட மீளமைப்பு முறிகள் இதற்கு ஓரளவு காரணமாக அமைந்ததோடு திறைசேரி உண்டியல்களின் மீதான முதலீடுகளின் அதிகரித்த வருவாயின் காரணமாக வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட அத்தகைய முதலீடுகளின் அதிகரிப்பும் மற்றுமோர் காரணமாக அமைந்தது.

### வெளிநாட்டுப்படுகடன்

1993 இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 2,698,830 இலட்சமாக விளங்கி 1992 இன் கடன் இருப்பான ரூ. 2,355,380 இலட்சத்தினைவிட 15 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுப்படுகடனின் அதிகரிப்புக்கு ரூ. 98,550 இலட்சம் கொண்ட தேறிய கடன் பெறுகைகளும் செலாவணிவீத மாறுபாடுகளின் காரணமாக பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 244,900இலட்சம் கொண்ட அதிகரிப்பும் காரணமாக அமைந்தன. வெளிநாட்டுப் பொறுப்புக்களில் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கு வகைகூறிய செயற்றிட்டக் கடன்களின் பேரிலான படுகடன் ரூ. 300,610 இலட்சத்தினால் ரூ. 2,150,640 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது ரூ. 125,110 இலட்சம் கொண்ட தேறிய கடன் பெறுகைகளினதும் செலாவணி வீத மாறுபாடுகளின் பேரிலான ரூ. 175,550 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்புக்களினதும் இணைந்தவிளைவாகும். பண்ட, காசு மற்றும் ஏனைய கடன்கள் வடிவிலமைந்த செயற்றிட்டமல்லாக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 1992 இன் ரூ. 505,360 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 548,190 இலட்சத்திற்கு அதிகரித்தது. முன்னைய ஆண்டைப் போலவே ரூ. 2,603,310 இலட்சமாக விளங்கிய சலுகைக் கடன்கள் 1993 இல் வெளிநாட்டுப் படுகடனில் 96 சதவீதத்திற்கு வகைகூறின. ரூ. 1,510,070 இலட்சமாக விளங்கிய வெளிநின்ற இருபுடைக் கடன்கள் 13 சதவீத அதிகரிப்பைக் காட்டிய வேளையில் ரூ. 1,093,250 இலட்சமாக விளங்கிய பல்புடைக் கடன்கள் 1993 இல் 20 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. வெளிநாட்டுப் படுகடன்மீது செலாவணி வீத மாறுபாட்டின் தாக்கம் அட்டவணை 1.60 இல் தரப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.60

## வெளிநாட்டுக் கடன்கள் மீதான செலாவணி வீதத் தளம்பல்களின் தாக்கம் 1989 - 1993 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த வரவுகள் .. .. | 12,003 | 16,550 | 25,969 | 15,316 | 16,839 |
| 2. மீளக் கொடுப்பனவுகள் ... ... | 5,675 | 4,846 | 4,881 | 7,955 | 6,984 |
| 3. தேறிய வரவுகள் ... ... | 6,327 | 12,099 | 21,088 | 7,361 | 9,855 |
| 4. செலாவணி வீதத் தளம்பலினால் பொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் ... | 23,259 | 8,486 | 16,608 | 13,599 | 24,490 |
| 5. காலப் பகுதி முடிவில் உள்ள பொறுப்பு ... ... | 156,298 | 176,883 | 214,578 | 235,538 | 269,883 |

(அ) தரவுகள் பதிவுசெய்யப்படும் நாளிலுள்ள பெறுமதி முறையை அடிப்படையாகக் கொண்டவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

### அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

1993 இல் ரூ. 560,090 இலட்சமாக விளங்கிய அரச படுகடன் மீதான மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் (கடன் தீர்ப்பனவும் வட்டிக் கொடுப்பனவுகளும்) 8 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்ததோடு கடந்த ஆண்டின் 30 சதவீத அதிகரிப்பைவிட கணிசமான அளவு குறைவானதாகக் காணப்பட்டன. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1992 இன் 12.2 சதவீதத்திலிருந்து 1993 இல் 11.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1993 இல் ரூபாப் பிணைகளினதும் பாதுகாப்பு முறிகளினதும் பெரிய தொகையொன்று முதிர்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து உள்நாட்டுப்படுகடன் மீதான மீள்கொடுப்பனவுகள் ரூ. 200,990 இலட்சமாக விளங்கி 11 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. இதேவேளையில் ரூ. 69,840 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 1992 இனைவிட 12 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டன.

திறைசேரி உண்டியல்களின் மீதான உயர்வருவாய்களைப் பிரதிபலிக்கும் வகையில் ரூ. 129,710 இலட்சமாக விளங்கிய குறுங்கால படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1992 இனைவிட 1993 இல் 9 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. நடுத்தர, நீண்டகால கடன்கள் மீதான வட்டி ரூ. 107,720 இலட்சமாக விளங்கி 1992 இன் 23 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் மிதமான 16 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தது. இதேவேளையில் 1993 இல் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 9 சதவீதத்தினால் ரூ. 51,830 இலட்சத்திற்கு அதிகரித்தன. அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.61 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.61

## அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் - (1989 - 1993)

| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 23,890 | 32,878 | 39,855 | 52,018 | 56,009 |
| (i) கடன் தீர்ப்பனவுகள் ... | 9,538 | 12,210 | 17,782 | 26,078 | 27,083 |
| (அ) உள்நாட்டு ... | 3,796 | 7,304 | 12,901 | 18,123 | 20,099 |
| (ஆ) வெளிநாட்டு ... | 5,742 | 4,906 | 4,881 | 7,955 | 6,984 |
| (ii) வட்டிக் கொடுப்பனவுகள் ... | 14,352 | 20,668 | 22,073 | 25,940 | 28,926 |
| (அ) உள்நாட்டு ... | 11,015 | 16,990 | 17,960 | 21,201 | 23,743 |
| குறுங்காலம் ... | 5,075 | 9,563 | 10,410 | 11,923 | 12,971 |
| நடுத்தர, நீண்டகாலம் ... | 5,940 | 7,427 | 7,550 | 9,278 | 10,772 |
| (ஆ) வெளிநாட்டு ... | 3,337 | 3,678 | 4,113 | 4,739 | 5,183 |
| வட்டி/ நடைமுறைச் செலவு (%) ... | 25.2 | 28.8 | 26.4 | 28.9 | 28.7 |
| படுகடன் பணி/ மொ. உ. உ. (%) ... | 9.5 | 10.2 | 10.7 | 12.2 | 11.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி